**குருநாகல் மாநகர சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி மாநகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குருநாகல் மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக மொத்த மீண்டெழும் வருமானம் பட்டியலிடல் ரூபா 536,132,075 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 64,181,059 தொகையான வீத வரி கணக்கீடு செய்வதற்காக பேரேட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருந்த போதிலும், ரூபா 471,951,016 தொகையான ஏனைய சகல வருமானங்களையும் கணக்கீடு செய்வதற்காக பேரேட்டுக் கணக்கொன்று பேணப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 3,768,898 தொகையான கேள்வி பிணை வைப்பு நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,560,941 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) உரிய பதிவேடுகளின் பிரகாரம் புதிய கடை தொகுதியின் வாடகை நிலுவை ரூபா 538,000 தொகை, நிலுவை சேவைக் கட்டணங்கள் ரூபா 311,286 மற்றும் நிலுவை தண்டப்பணம் மற்றும் ரூபா 1,547,968 முறையே ரூபா 533,500 தொகை ரூபா 308,786 தொகை மற்றும் ரூபா 1,547,518 என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் முன்னராக கிடைத்த வருமானம் ரூபா 263,484 ஆக இருந்ததுடன் அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,568 என காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ஆரம்ப மீதியை விஞ்சிய ரூபா 9,576,968 ஆன கடன் மீதிகள் குறிப்பாக இனங்காணப்படாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் செலவினங்களுக்காக உரிய ரூபா 10,589,608 பெறுமதி சேர் வரித்தொகை செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) சொத்துக்களை கொள்வனவு செய்வதற்குரிய ரூபா 388,373 தொகையான பெறுமதி சேர் வரி சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 678,227 ஆன நுகர்வுப் பொருட்கள் தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஐ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 7,766,494 ஆன 04 வகையான சொத்துக்களுக்குரிய பெறுமதி சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 51,546,495 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டின் ஏப்ரல் மாதம் மொத்த நீர் கொள்வனவின் பெறுமதியான ரூபா 4,112,041 ஆன போக்குவரத்து, இணைப்பு ஏனைய சேவைகளின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் மூலதனச் சொத்துக்கள் திருத்தம் மற்றும் பராமரிப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 08 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பதிவேடுகளின் மீதிகளுக்கிடையே ரூபா 27,046,101 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன.

(ஆ) 19 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் செலவினக் கடன்கொடுத்தோர் ஒதுக்கீடாக ரூபா 40,865,753 ஆன கடன்கொடுத்தோர் மீதிகள் பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் உரிய மீதியின் பெறுமதி ரூபா 41,306,752 ஆக இருந்தமையால் ரூபா 440,999 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பிழந்த காசோலை மீதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 741,006 ஆக இருந்த போதிலும் பட்டோலையின் பிரகாரம் ரூபா 728,003 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 13,003 ஆக இருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

i. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 134,061,608 ஆன பெறவேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 31,532,844 தொகை ஓராண்டிற்கு மேற்பட்டதாக இருந்தன. மேலும் ரூபா 91,432,824 தொடர்பாக காலப்பகுப்பாய்வும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ii 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான வருடங்களில் 15 மதிப்பிழந்த காசோலைகளுக்குரிய ரூபா 728,003 ஆன மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

i. 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 85,243,946 ஆக இருந்தது.

ii. மீளாய்வாண்டின் இறுதியில் 1956 முதல் 2016 வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 73,579,691 தொகையான வைப்புக்களில் தீர்வு செய்யப்படக்கூடிய மீதிகளை இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

iii. மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கும் செலுத்த வேண்டிய மீதி ரூபா 81,587,381 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 328,786,949 தொகையான 13 கணக்கு விடயங்களுக்குரிய விரிவான பட்டோலைகள், வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை, 1996 முதல் 1997 ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவை வைப்புக்கள் பதிவேடு வைப்பு பதிவேடுகள், முத்திரைக் கட்டணங்கள் பதிவேடு மற்றும் மீதிகள் உறுதிப்படுத்தல்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவ் விடயங்கள் தொடர்பாக விரிவான பரீசோதனையொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களு டனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| i. நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த ரூபா 81,520 கூட்டுத்தொகையான 24 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| ii. நிதிப்பிரமாணம் 571 | வைப்புச் செய்து 02 ஆண்டுகள் காலம் கடந்த ரூபா 20,334,859 தொகையான 1046 வைப்புக்கள் காணப்பட்டன. |
| iii. நிதிப்பிரமாணம் 751(2) | நகர சபைக்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகளில் நகர சபை மண்டபம் மற்றும் கட்டிடங்களில் பொருத்தப்பட்டிருந்த மின்சாரம் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| iv. நிதிப்பிரமாணம் 751(4) | பெற்றுக்கொண்ட பொருட்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் பின் காட் மாத்திரம் பேணப்பட்டிருந்தது. பொருட்கள் முறையாக ஒழுங்காக அடுக்க வைக்கப்படாமல் இருந்ததுடன் இதன் காரணமாக பௌதீக பரிசோதனையின் போது இருப்பு மீதிகளை உறுதிப்படுத்துவது சிக்கலாக இருந்தது. |
| v. நிதிப்பிரமாணம் 755(1)(2) | களஞ்சிய உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறல், இளைப்பாறுதல் போன்ற சந்தர்ப்பங்களில் களஞ்சியத்தில் காணப்பட்ட பொருட்கள் முறையாக பௌதீக இருப்பு மீதிகள் பரீட்சிக்கப்பட்டு கையளிக்கப்படாமையால் இருப்புக்களில் பற்றாக்குறை மற்றும் மிகைகள் காணப்பட்டன. |

| | | |
|---|---|---|
| vi. | நிதிப்பிரமாணம் 756 | வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது பொருட்கள் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இருப்பு பதிவேடுகள் முறையாக சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| vii. | நிதிப்பிரமாணம் 762 | நீண்டகாலமாக பாவனைக்கு வழங்கப்படாத தேவையற்ற இருப்பு பொருட்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளரால் (வடமேல்) ஆந்தாகலகந்த தோட்டத்தை கூறுகளாக்கி விற்பதற்கு பரிந்துரைக்கப்பட்ட 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதிய கடிதம். | காணித் துண்டொன்றின் குறைந்த காணி அளவு 15 பேர்ச் இற்கு குறைவாக இருக்க கூடாத போதிலும் ஆந்தாகலவத்த தோட்டம். முத்தெட்டுகல காணியின் 17 ஆம் இலக்க பொருட்கள் மற்றும் 33 ஆம் லொட் என்பவற்றில் காணி அளவு குறைவாக இருந்தன. |
| (ஈ) | <u>பொது நிர்வாகச் சுற்றறிக்கை</u> | |
| | 2014 யூன் 16 ஆந் திகதிய 16/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்துவதற்கு உரித்தில்லாத உத்தியோகத்தரொருவர் உத்தியோகபூர்வ வாகனத்தை பயன்படுத்தி 2016 ஆகஸ்ட் முதல் நவம்பர் வரை 322 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 30,637 செலவிடப்பட்டிருந்தது. |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 136,766,383 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 198,984,605 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 62,218,222 ஆன வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

வீதவரி மற்றும் வரி, அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ஏனைய வருமானம், வருமான மானியங்கள் என்பன முறையே ரூபா 9,090,917, ரூபா 1,562,076, ரூபா 51,048,214 மற்றும் ரூபா 21,652,971 ஆல் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

வீதவரி மற்றும் வரி, அனுமதிப்பத்திர கட்டணங்கள், ஏனைய வருமானம் மற்றும் வருமான மானியங்கள் முறையே ரூபா 9,090,917 தொகை, ரூபா 1,562,076 தொகை ரூபா 51,048,214 மற்றும் ரூபா 21,652,971 ஆல் குறைவடைந்தமை மற்றும் நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**2.3.2 வீதவரி**

--------------

மீளாய்வாண்டிற்காக 12 வட்டாரங்களின் கீழ் 14280 அலகுகளுக்குரிய பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 62,632,717 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 37,850,288 ஆக இருந்தது. அது வருடாந்த பட்டியலிடலில் 60 சதவீதமாக இருந்ததுடன், அதில் அரசிற்குரிய 13 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,141,540 ஆன மீதியொன்று காணப்பட்டது.

**2.3.3 கடை வாடகை**

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் குருணாகல் புதிய கடை தொகுதியில் 54 கடைகளுக்குரிய ரூபா 538,000 ஆன கடை வாடகை மற்றும் ரூபா 311,286 ஆன சேவைக் கட்டணங்கள் நிலுவையாகக் காணப்பட்டன.

(ஆ) குருணாகல பஸ் நிறுத்துமிடத்தில் 71 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 879,374 ஆக இருந்ததுடன் நிலுவையாகக் காணப்பட்ட முற்கொடுப்பனவு தொகை ரூபா 890,605 ஆக இருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் ரஜபிஹில்ல மற்றும் ரன்தலிய ஆகிய இரண்டு வாடி வீடுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 6,254,150 ஆன வாடிவீட்டு வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,421,646 ஆன பொது வியாபாரச் சந்தை மற்றும் ஏனைய கடை வாடகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 நீர் வருமானம்**

---------------------------

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை நீர் வருமானம் ரூபா 41,789,884 ஆக இருந்தது. ரூபா 50,000 இற்கு மேற்பட்ட நிலுவை காணப்படும் 87 நீர் பாவனையாளர்களுக்குரிய ரூபா 18,576,354 ஆன நிலுவையொன்று காணப்பட்டதுடன், அது மொத்த நிலுவையில் 44 சதவீதமாக இருந்தது. அதில் நகர ஆணையாளராக பட்டியலிடப்பட்ட ரூபா 3,422,421 ஆன நிலுவையும் 6747 ஆம் இலக்க பாவனையாளரின் கீழ் வில்கொடை வீதி பொது நீர் குழாயிற்குரிய ரூபா 2,294,742 தொகையும் 5163 ஆம் பாவனையாளர் இலக்க குருணாகல் போதனா வைத்தியசாலைக்குரிய ரூபா 4,705,999 ஆன நிலுவையும் காணப்பட்டன.

**2.3.5 ஏனைய வருமானம்**

------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 740,821 ஆன மலசலகூட கேள்வி வைப்புப் பணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த லொத்தர் கூட வாடகை மற்றும் சுற்றுலா வாடகை பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 1,415,457 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 27,800,577 ஆன முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டியிருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுகர்வுப் பொருட்களான டயர் மற்றும் டியூப், மின் உபகரணங்கள், எழுதுகருவிகள், நீர்க்குழாய் மற்றும் உப பாகங்கள், இரும்பு பட்டங்கள், கம்பி, GI குழாய் போன்ற உப பாகங்களுக்காக நுகர்வுப்பொருட் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் 15 வாகனங்கள் கைதவிர்க்கப்பட வேண்டிய நிலைமையில் காணப்பட்ட போதிலும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபை 252 (அதிகாரம்) 247 (உ) பிரகாரம் மாநகர சபை நிர்வாக எல்லைக்குள் காணி விற்பனையால் கிடைத்த தொகையில் 01 சதவீதம் சபைக்கு செலுத்த வேண்டிய போதிலும், ஆதாகல கந்த வத்த முத்தெட்டுகல காணியை கூறுகளாக்கும் போது 42 காணிக் கூறுகளுக்கு உரிய உரித்து பெறுமதியின் பிரகாரம் ரூபா 236,537 குத்தகை தொகை குறைத்துப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) சபையின் 03 வங்கிக் கணக்குகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதியில் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்க கூற்றின் பிரகாரம் 05 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 42,953 இணங்காணப்படாத பெறுவனவுகள் 04 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 40,538 ஆன ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக காணப்படும் காசாகாத பெறுவனவுகளும் 02 சந்தர்ப்பங்களின் கீழ் ரூபா 1,653 ஆன இனங்காணப்படாத கொடுப்பனவு மீதிகளும் காணப்பட்டன.

(உ) மர இருப்பொன்று கிழிக்கப்பட்ட பலகை இருப்பொன்று, PVC உதிரிப்பாகங்கள் மற்றும் நீர்குழாய் இருப்பு, டயர், வெளிநபரெருவருக்குச் சொந்தமான பொருட்கள் மற்றும் அகற்றப்பட்ட பொருட்கள் அளவிடாமலும் இருப்பு பதிவேடுகளுக்கு எடுக்கப்படாமலும் களஞ்சியத்திலும் வெளியிலும் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) கட்டிடங்களிலிருந்து அகற்றப்பட்ட பாரியளவிலான பொருட்கள் அளவொன்று இயற்கை அழிவுகளுக்கு உட்பட்டு மேவுகையில்லாமல் நகர சபை அலுவலக வளவில் ஆங்காங்கே முறையற்ற விதத்தில் கணக்கிட முடியாத வகையில் பாதுகாப்பற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

### 3.2 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) காணி பதிவேட்டின் பிரகாரம் 35 ஏக்கர் 1 ரூட் 39.13 பேர்ச் அளவிலான 30 காணிகளின் உரித்து சபையிடம் காணப்படவில்லை.

(ஆ) காணி பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு 2016 செப்தம்பர் 25 ஆந் திகதி பௌதீக ரீதியாக பரீட்சித்த போது 34 ஏக்கர் 01 ரூட் 42.03 பேர்ச் அளவிலான 04 காணிகளை கணக்காய்விற்கு காண்பிப்பதற்கு உத்தியோகத்தர்கள் தவறினர்.

(இ) 16.48 பேர் அளவிலான வில்கொட அரச மரம் அமைந்துள்ள காணியில் 13 பேர் அளவிலான பகுதி அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வெளித்தரப்பினரால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஈ) வில்கொட மோல்வத்த கிணறுடன் கூடிய காணியில் 19 ஏக்கர் 2 ரூட் 24 பேர்ச் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக காண்பிக்கப்பட்ட காணி 1 ஏக்கரை விட குறைந்த அளவினை உடையதாக இருந்தது.

(உ) ஆதாகலவத்த மிலேனியம் சிட்டி காணி கூறுகளாக்கும் போது சபைக்கு வழங்கப்பட்ட 01 ஏக்கர் 03 ரூட் 01 பேர்ச் அளவிலான நிலப்பகுதியின் அரைப்பங்கு அளவு சிறிய குளமொன்றாக இருந்தமையால் சபைக்கு பாதகமான நிலைமையொன்று உருவாகியிருந்தது.

(ஊ) ஆதாகலவத்த காணி கூறுகளாக்கப்படும் போது பொது நடவடிக்கைகளுக்காக கற்களுடன் கூடிய காணி சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

### 3.3 விளைவற்ற சொத்துக்கள்

30 பேர்ச் அளவிலான விலகொடை மில்ஸ் காணி 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டு வரை எவ்வித செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்பள்ளி மற்றும் பகல் நேர பாதுகாப்பு நிலைய நிர்மாணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. சபை நிதி ரூபா 25,418,023 தொகை செலவு செய்து 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 05 கட்டங்களின் கீழ் இக் கட்டிடத்தின் பகுதியொன்று 2016 செப்தெம்பர் வரையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்கட்டிடம் 4 மாடிகளாக நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலைகள் கட்டம் கட்டமாக வேறாக்கப்பட்டு முதலாவது கட்டத்தின் பெறுமதி மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலை கோரக்கூடிய ரூபா 1,790,637 இற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் திறந்த கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும் ஒரு ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு அரைப்பங்கு முடிவடைந்த நிர்மாணத்திற்காக வேறொரு ஒப்பந்தகாரர் முன் வராமையால் முதலாவது ஒப்பந்தகாரரால் உரிய நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ii. பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8(ஆ) பிரிவின் பிரகாரம் வேலையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கு பின்னரான 28 நாட்கள் வரை செயலாற்றல் பிணை முறி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், I II III IV ஆம் கட்டங்கள் அதற்கு இணங்க காணப்படவில்லை. மேலும் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்குரிய செயலாற்றல் பிணையின் காலம் நீடிக்கப்படாதிருந்ததுடன் III ஆம் கட்ட நிர்மாணம் 30 நாட்கள் தாமதத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 53,460 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

iii. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய அளவீட்டுப்பத்திரத்திற்கு இணங்க குளியறைக்கும் மலசலகூடத்தொகுதிக்கும் குறிப்பிடப்பட்டிருந்த உற்பத்தி மாதிரி அமெரிக்கன் தர உப்பாகங்கள் (American Standard) பொருத்தப்பட வேண்டிய போதிலும் 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது

ரூபா 387,000 ஆன 25 உபபாகங்கள் சீனா, மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டவற்றை பயன்படுத்தியிருந்தது.

iv. விலை கோரல் நிபந்தனையின் பிரகாரம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விலைகள் பயன்படுத்தும் போது நிர்மாண நடவடிக்கைகளுக்கான நீர் மற்றும் மின்சாரம் என்பன ஒப்பந்தகாரரால் வழங்கப்பட வேண்டியதுடன், அதற்காக அளவீட்டுப் பத்திரத்திற்கு இணைப்புக் கட்டணம் மாத்திரம் உள்ளடக்க முடியுமான போதிலும், மேற்படி நிர்மாண வேலையின் ஆரம்ப 4 கட்டங்களுக்காக ரூபா 22,751,900 தொகையான பூர்த்தி செய்த வேலைப் பெறுமதியை பூரணப்படுத்துவதற்காக நீர் மற்றும் மின்சாரம் என்பவற்றை சபையினால் வழங்கப்பட்டிருந்ததுடன், ரூபா 13,994,838 ஆன செய்யப்பட்டு வரும் ஐந்தாம் கட்டத்திற்காக நீர் மற்றும் மின்சாரம் நகர சபையினால் வழங்கப்பட்டு வந்தது. அதற்காக உரிய கழிப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,943,556 ஆன மதிப்பீட்டு அடிப்படையில் 2015 சபை நிதியத்திலிருந்து செலவு செய்யப்பட்ட ஆதாகல சனசமூக மண்டபத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. 2015 யூலை 28 ஆந் திகதி வரை மட்டுப்படுத்தப்பட்ட விலை கோரல் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. வேலையை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கு பின்னரான 28 நாட்கள் வரை செயலாற்றல் பிணை முறி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அது வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதிக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் கொமட் மலசலகூட கோப்பை மற்றும் செரமிக் முகம் கழுவும் பேசன் டொட்டோ அல்லது அமெரிக்கன் தர உப்பாகங்கள் பொருத்தப்பட வேண்டிய போதிலும் மெக்ஸ் குளோபல் உபபாகங்கள் பொருத்தப்பட்டிருந்தமை 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட நிலையப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(இ) புதிய அலுவலக தொகுதி மற்றும் இளைப்பாறும் அறை நிர்மாணம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நிர்மாணத்தின் உடன்படிக்கை காலம் 06 மாதங்களாக இருந்த போதிலும் ஒப்பந்தகாரர் 03 மாதங்களுக்கு சமர்ப்பித்த பிணை முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 01 ஆம் கட்ட நிர்மாணம் 23 நாட்கள் தாமதித்து இருந்த போதிலும் தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாமை மற்றும் செயலாற்றல் பிணைப் பொறுப்பின் காலம் நீடிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

ii. கேள்வி அழைப்பு பத்திரங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட விலைகளை பயன்படுத்துவதற்கான வழிகாட்டலின் பிரகாரம் சகல நீர் மற்றும் மின்சாரம் உட்பட நுகர்வுச் செலவினம் ஒப்பந்தகாரரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்காக கூட்டுபெறுமதியொன்று மாத்திரம் செலுத்த வேண்டுமென குறிப்பாக சொல்லப்பட்டிருந்த போதிலும் முதலாம் கட்ட நீர் இணைப்பிற்காக ரூபா 35,000 உம் மின்சார இணைப்பிற்காக ரூபா 40,000 தொகை கூட்டுப்பெறுமதியாக செலுத்தப்பட்டிருக்கையில் முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 10,124,132 ஆன முடிவு வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நீர் மற்றும் மின்சாரம் சபையினால் வழங்கப்பட்டிருந்தது அதற்கு மேலதிகமாக இரண்டாம் கட்டத்திற்காக செலுத்தப்பட்ட சான்றுறுதிப்படுத்தப்பட்ட பெறுமதியான ரூபா 7,973,173 பெறுமதி சேர் வரி உட்பட) நிர்மாண நடவடிக்கைகளுக்காகவும் மூன்றாம் கட்டத்தின் 2016

ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரை சான்றுறுதிப்படுத்தப்பட்ட ரூபா 7,620,358 இற்காக நீர் மற்றும் மின்சாரம் சபையினால் வழங்கப்பட்டிருந்தது.

iii அளவீட்டுப்பத்திரத்தின் பிரகாரம் செயற்திட்ட முகாமையாளராக ரூபா 400,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவ்வாறான கொடுப்பனவொன்று உள்ளடக்கப்பட்ட நியாயமானதென கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்படவில்லை. மேலும் ஒப்பந்தக்காரர் அவ்வாறான நடவடிக்கைகளை நிறைவேற்றப்படாதிருந்ததுடன் மாநகர சபையின் பொறியில் பிரிவு மூலம் அந்நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

iv. இந்நிர்மாணத்தின் இரண்டாம் கட்டத்தின் மூலம் கீழ் மாடியின் மலசலகூட முறைமைக்காக ரூபா 313,700 தொகையான 19 உபபாகங்கள் அளவீட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த டெட்டோ அமெரிக்க நியமத்துடனான உப பாகங்களுடன் பொருத்த வேண்டியிருந்த போதிலும், சீனா, மலேசியா, இலங்கை போன்ற நாடுகளின் உற்பத்தி செய்யப்பட்ட பாகங்கள் பொருத்தப்பட்டிருந்தமை 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட நிலைய பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன.

v 04 மாடிகளுடன் கூடிய பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த புதிய அலுவலக தொகுதி மற்றும் ஓய்வறை 2016 ஆகஸ்ட் 25 ஆந் திகதி திட்டமிடப்பட்டிருந்ததுடன் 02 கட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 03 ஆவது கட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்நிர்மாண வேலையின் நிர்மாண மதிப்பீடு வெளிநிறுவனமொன்றின் மூலம் மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பயன்படுத்தப்பட்ட கூறுவிலைகள் நிறுவனமொன்றின் அங்கீகரிக்கப்பட்ட விலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நகர சபையின் கூரையை திருத்தியமைத்தல்

---

i. மேற்படி நிர்மாணத்தின் ரூபா 3,800,000 தொகையான மதிப்பீட்டுப் பெறுமதி தேசிய போட்டி தவிர்க்கப்பட்டு மட்டுப்படுத்தப்பட்ட விலை விபரங்கள் கோரக்கூடிய வகையில் ரூபா 2,000,000 மற்றும் ரூபா 1,800,000 என இரண்டு கட்டங்களில் ஒதுக்கப்பட்டிருந்தன.

ii. மதிப்பீட்டினை அங்கீகரித்தல், கூறுவிலை கோரல் வழங்குனர்களைத் தெரிவு செய்தல் என்பவற்றை செய்வதற்கு முன்னர் பணம் மற்றும் சட்டம் தொடர்பாக குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு பின்னர் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(உ) நகர சபையின் உட்கூரைத் திருத்த வேலைகளுக்காக ரூபா 2,620,000 தொகையான பொறியியலாளர் மதிப்பீடு 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி ரூபா 1,850,000 மற்றும் 2016 மார்ச் 18 ஆந் திகதி ரூபா 770,000 என வேறாக்கப்பட்டு தேசிய போட்டி கூறு விலை கோராமல் மட்டுப்படுத்தப்பட்ட கூறுவிலை கோரப்பட்டு வழங்கப்பட்டிருந்ததுடன் முதலாவது ஒப்பந்தகாரருக்கே இரண்டாவது கட்டத்தையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், திருத்த வேலைகளுக்கான மின்சாரம் ஒப்பந்தகாரராலேயே வழங்கப்பட வேண்டிய போதிலும் மாநகர சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. உட்கூரையின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு குறுகிய காலத்தில் உட்கூரையின் ஒரு பகுதி கழன்று நிலத்தில் விழுந்திருந்ததை 2017 யூலை 31 ஆந் திகதி வரை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

சபையின் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தை குருணாகல் பிரதேச சபைக்குரிய காணியொன்றில் பேணிச் சென்றிருந்ததுடன் 2017 யூலை 11 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மலசலகூட கழிவுகளை வெளியேற்றுவதற்காக நிர்மாணிக்கப்பட்ட முறைமையில் விடுவிக்கப்பட்டு நீர் முறையாக வடிகட்டப்படாமையால் பிரதேச வாசிகளின் எதிர்ப்பு தோன்றிய காரணத்தினால் தற்போது மலசலகூட கழிவுகள் அவ்விடத்திற்கு வெளியேற்றுவது நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கொம்போஸ்ட் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் கழிவு வேறாக்கப்படும் இயந்திரமொன்று ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்ற நிலைக்கு உட்பட்டிருந்தது.

(இ) வாரத்தின் ஒரு நாளில் திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு 25 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட லோட் கழிவுப்பொருள் சேகரிக்கப்படுவதுடன் அதில் 25 சதவீதம் அளவில் வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்களாக சேகரிக்கப்பட்டிருந்தன. சேகரிக்கப்படும் மொத்த கழிவுகளின் அளவில் 75 சதவீதமான 20 லோட்களுக்கு மேற்பட்டவை திறந்த வெளியில் வகைப்படுத்தப்படாமல் வெளியேற்றப்படுவதால் பூமியில் கழிவுப்பொருள் மேடொன்று உருவாகியிருந்தது.

(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 21 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திகதி வரையில் அதில் 10 வாகனங்கள் விளைவற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தன் காரணமாக பாவிக்கக்கூடிய நிலமையில் காணப்படவில்லை.

## 04. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் 05 வருமான விடயங்கள் மற்றும் 07 செலவின விடயங்களில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே 15 சதவீதம் முதல் 51 சதவீதம் வரையான பொருண்மையான விலகலொன்று காணப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்த ஒரு உள்ளக கணக்காய்வு உதவியோகத்தர் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தமையால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் மாநகர சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் | | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- | --- |
| (அ) | கணக்கீடு | i | வருமானம் மற்றும் செலவினங்களுக்காக போதியளவு தனியால் பேரேட்டுக் கணக்குகள் பராமரிக்கப்படாமை. |
| | | ii | கட்டுப்பாட்டுக் கணக்கு இணங்காமை |
| | | iii. | நிலையான சொத்துக்கள் விபரமான பட்டோலைகள் மூலம் உறுதிப்படுத்தப்படாமை |
| | | iv | செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) | ஒப்பந்த நிர்வாகம் | i | பெறுகை வழிகாட்டல்களிலிருந்து விலகி செயற்படல் |
| | | ii | நிர்மாணங்களுக்கான தேவையான நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) | வாகன நிர்வாகம் | i | இயங்காத வாகனங்களை திருத்தம் செய்யாமல் விளைவற்றுக் காணப்படல் |
| | | ii | பூரணமற்ற மற்றும் தாமதமாக ஓட்டக் குறிப்புக்கள் பூர்தி விடய எழுதுனருக்கு கையளித்தல் |
| | | iii. | கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய வாகனங்கள் நீண்டகாலமாக ஆவ்வாறே காணப்பட்டமை |
| (ஈ) | திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் | | கழிவுப்பொருள் வகைப்படுத்தப்படாமல் சேகரித்தல் மற்றும் வெளியேற்றுவதற்கு நடைமுறையொன்று காணப்படாமை. |
| (உ) | வருமானம் | | நீண்டகாலமாக அறவிடப்படாமல் நிலவி வரும் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்க முடியாத நிலுவை வருமானம் காணப்படல் |